<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்</u>
<u>மடத்துக்குளம்</u>

முன்னிலை: திரு.**R. பாக்கியராஜ், B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் 07 ம் நாள் செவ்வாய்கிழமை
(திருவள்ளுவராண்டு 2052 ப்ரீபிலவ வருடம் கார்த்திகை மாதம் 21 ம் நாள்)

**இ.ம.எண். 300/2020**
**<u>அ.வ.எண். 185/2020</u>**

எஸ். நாராயணமூர்த்தி

**... மனுதாரர்/ வாதி**

**/ எ திர் /**

மதினா . **.. எதிர்மனுதாரர்/பிரதிவாதி**

இறுதியாக இம்மனு கடந்த 25.11.2021 ஆம் நாள் என் முன்பாக வரப்பட்டு இம்மனுவில் மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. டி. இளங்கோவன் பி.ஏ.,எல்.எல்.பி., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஆர். மோகன்ராஜ் பி .ஏ, பி.எல்., அவர்கள் ஆஜராகியும் , இதுவரை பரிசீலனையிலிருந்து வந்து ஆவணங்களை ஆராய்ந்து இன்று இந்நீதிமன்றத்தில் பின்வருமாறு வழங்கப்படும்

<u>உ த் த ர வு</u>

**1.** இந்த மனு, மனுதாரர்கள்/ பிரதிவாதிகளால் உ.வி.மு.ச. கட்டளை 39 விதி 1,2 ன் படி, எதிர்மனுதாரரோ, அவரது உள்ளிட்ட ஆட்களோ , தாவா சொத்துகளுக்குள் அத்துமீறி நுழையவோ , மனுதாரரின் சுவாதீன அனுபவத்திற்கு எந்த வித இடையூறுகளும், கொடுக்க கூடாது என தாவா முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளைகோரி தாக்கல் செய்யப்பபட்டுள்ளது.

**2.** **<u>மனுவின் சுருக்கம்:</u>**

தாவா சொத்துக்கள் கடந்த 01.02.2020 ம் தேதி மனுதாரரும் , பொன்னம்மாள் என்பவரும் சேர்ந்து ஏற்படுத்திக்கொண்ட போக்கிய உடன்படிக்கை படி

மனுதாரரின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வரும் சொத்துக்கள் ஆகும் . தாவா சொத்துக்களை 5 வருட கெடுவிற்கு மனுதாரர் கொடுக்கும் தொகைக்கு வட்டி இலலை. தாவா சொத்துக்களுக்கு குத்தகை இல்லை என்ற அடிப்படையில் ரூ . 5 லட்சம் பொன்னம்மாள் என்பவருக்கு செலுத்தி தாவா சொத்துக்களை போக்கியத்திற்கு பெற்று மனுதாரர் அனுபவித்து வருகிறார்.

எதிர்மனுதாரர் பொன்னம்மாளின் மகள் ஆவார் . எதிர்மனுதாரர் அவருடைய திருமணத்திற்கு பின்னர் அவரது கணவருடன் வாழாமல் இஸ்லாமிய மதத்தை சேர்ந்த சபியுல்லா என்ற நபருடன் கடந்த 35 ஆண்டுகளாக சேர்ந்து வாழ்ந்துகொண்டு மல்லிகா என்ற தனது இயற்பெயரை மதினா என மாற்றிகொண்டு வாழ்ந்து வருகிறார்.

தாவா சொத்துக்களுக்கும், எதிர்மனுதாரருக்கும் எந்தவித உரிமையும் , பாத்தியமும் கிடையாது. தாவா சொத்துக்கள் எதிர்மனுதாரரின் தாயார் பொன்னம்மாளின் தனிப்பட்ட நேரடி சுவாதீன அனுபவத்தில் சுமார் 37 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வந்து, மனுதாரருக்கு போக்கியத்திற்கு கொடுக்க முன்வந்து மனுதாரர் போக்கியத்திற்கு பெற்று அனுபவித்து வருகிறார் . தாவா சொத்துக்களை சுவாதீனம் பெற்றதற்கு பின்னிட்டு கடந்த சில நாட்களாக பூமிகளை பொக்லின் இயந்திரம் கொண்டு சமப்படுத்தி, பயிரிட விவசாய காரியங்களை செய்து வருகிறார்.

பொன்னம்மாள் மற்றும் அவரது மகன்கள் எதிர்மனுதாரர் மீது தொடுத்த அ.வ.எண். 118/2020 வழக்கு நிலுவையில் உள்ளது . மேலும் எதிர்மனுதாரர் மனுதாரர் மீதும், பொன்னம்மாள் வகையறா மீதும் தாக்கல் செய்த அ.வா.எண். 169/2020 வழக்கும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது . எதிர்மனுதாரர் தொடர்ந்த அ.வ.எண். 169/2020 ல் வழக்கு சொத்திற்கும் , இந்த தாவா சொத்துக்களுக்கும் சம்பந்தம் இல்லை . தாவா சொத்துக்கள் எதிர்மனுதாரரின் சுவாதீன அனுபவித்தில் இல்லை.

எதிர்மனுதாரர் கடந்த 12.12.2020 ல் தாவா சொத்துகளுக்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த ஆட்களை வேலை செய்ய கூடாது என்றும், மனுதாரரை பூமியை விட்டு வெளியேறும் படி கூறி தகராறு செய்தார் . மனுதாரரின் சுவாதீன அனுபவத்திற்கு இடையூறுகள் கொடுக்க எதிர்மனுதாரருக்கு எந்தவித சட்டமும் , நியாயமும் கிடையாது.

எனவே இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி இம்மனு தாக்கல் செய்யப்பபட்டுள்ளது.

**3. <u>அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள விபரப்பத்திரிக்கையே இம்மனுவின் எதிருரையாக பாவிக்க எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் சுருக்கம்</u>**

மனுதாரரின் மனு பொய்யானது . சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரரால் வெளிப்படையாய் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் பொய் ஆகும் . பிரதிவாதியானவர் பொன்னம்மாளின் மகள் என்ற விபரம் மட்டும் உண்மை.

தாவா சொத்தை பொன்னம்மாள் மனுதாரருக்கு போக்கியத்திற்கு கொடுக்கவில்லை. போக்கிய ஆவணம் மோசடியாக தயார் செய்யப்பட்டது . மனுதாரர் தாவா சொத்தில் இல்லை. இவ்வழக்கு நிலுவையில் உள்ளது என்ற விபரம் மட்டும் சரியானது. தாவா சொத்தும், அ.வ.எண். 169/2020 ல் உள்ள சொத்தும் வெவ்வேறானது என்பது உண்மையில்லை. தாவா சொத்தில் 12.12.2020 ஆம் தேதியில் பிரதிவாதி இடையூறு செய்ய முயற்சிப்பதாக சொல்வது பொய் . பிரதிவாதியின் தகப்பனார் கொங்கினியப்பன் என்பவருக்கு மடத்துக்குளம் தாலூக்கா , வேடப்பட்டி கிராமத்தில் பூர்வீகமாக விவசாய பூமிகள் உள்ளது.

மேற்படி பூமிகளை 01.03.1980 ஆம் தேதியன்று பிரதிவாதியின் தகப்பனார் கொங்கினியப்பன் தன்னுடைய மனைவி மற்றும் மகன்கள் மற்றும் மகளான இந்த பிரதிவாதியும் சேர்ந்து பதிவு செய்யப்பட்ட ஒரு பாகபத்திரம் ஏற்படுத்திக்கொண்டனர். மேற்படி பாக பத்திரத்தில் ஏ செட்யூல் சொத்துக்கள் பிரதிவாதிக்கும் , அவரது சகோதரரான துரையரசன் பாகத்திற்கும் கூட்டாக ஒதுக்கப்பட்டது. அதன்படி வேடபட்டி கிராமம், க.ச. 145 நெ. காலையில் புஞ்சை ஏக்கர் 6.33 விஸ்தீரணம் உள்ள விவசாய பூமிகள் பிரதிவாதிக்கும் , அவரது சகோதரர் துரையரசன் பாகத்திற்கும் கூட்டாக ஒதுக்கப்பட்டது.

மேற்படி சொத்துக்களில் பிரதிவாதியின் தகப்பனார் கொங்கியப்பன் மற்றும் பொன்னம்மாள் என்பவருக்கும் , ஆயுள் வரை அனுபவ பாத்தியம் கொடுத்து உரிமை வழங்கப்பட்டது. பிரதிவாதியின் சகோதரர் துரையரசன் கடந்த 10.02.1995 ஆம் தேதியில் தன்னுடைய தயாரான பொன்னம்மாளுடன் சேர்ந்து அவருக்கு உரிய 3 ஏக்கர். 3.30 சென்ட் பூமியை விற்பனை செய்துவிட்டார். துரையரசன் வற்புறுத்தியதால் பிரதிவாதி கையெழுத்து செய்துள்ளார்.

பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 3.30 ஏக்கர் உள்ள பூமியை பிரதிவாதி தனது சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார் . பிரதிவாதியின் தாயாரான பொன்னம்மாளுக்கு அன்றாட பராமரிப்பு செலவுகளுக்கு பணம் கேட்டதன் பேரில் பிரதிவாதி அதற்கு ஒப்புக்கொண்டு பணம் கொடுத்து வருகிறார். பு.ஏ. 3.03 விஸ்தீரணம் உள்ள பூமிகளில் ஏக்கர் 1.00 விஸ்தீரணம் உள்ள பூமியை பொன்னம்மாள் மற்றும் அவரது சகோதரரான துரையரசனுடன் சேர்ந்து பிரதிவாதி கடந்த 11.06.1991 ஆம் தேதியில் விற்பனை செய்து ரூ . 21,000/– பராமரிப்பு செலவிற்கு கொடுத்துவிட்டார் . மீதமுள்ள ஏக்கர் 2.03 விஸ்தீரணம் உள்ள பூமிகளை பிரதிவாதி தனது சுவாதீன அனுபவத்தில் வைத்துள்ளார். அதன் விஸ்தீரணத்தை அதிகப்படுத்தி வாதி தாவாவில் குறிப்பிட்டுள்ளார் .

கடந்த 2019 ம் வருடம் வாதி , பிரதிவாதியை அணுகி தாவா பூமியை குத்தகைக்கு விடுமாறு கேட்டார். பிரதிவாதி குத்தகைக்கு விடாததால் வீண் விரோதம் கொண்டு தாவா சொத்தை அபகரிக்க வேண்டி கடந்த 22.04.2019 ஆம் தேதியில் பிரதிவாதியும், அவரது மகள் மற்றும் மகன் ஆகியோர்கள் சேர்ந்து வாதிக்கு குத்தகைக்கு விட்டது போல மோசடியான ஆவணம் ஏற்படுத்தி தாவா சொத்தில் செங்கல் சூளை அமைக்க முற்பட்டனர் . அதனால் வாதி, பிரதிவாதியின் தாயார் பொன்னம்மாள் மற்றும் சகோதரிகளை தூண்டிவிட்டு அ .வ.எண். 118/2020 தாக்கல் செய்துள்ளார் .

கடந்த 01.11.2020 ஆம் தேதியில் தாவா சொத்தில் பிரதிவாதி விவசாய பணியுல் ஈடுபட்டு இருந்த போது வாதி விவசாயம் செய்ய கூடாது என்று மிரட்டினார் . எனவே நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி பிரதிவாதி அ.வ.எண். 161/2020 தாக்கல்

செய்து நிலுவையில் உள்ளது . பிரதிவாதியின் தாயார் பொன்னம்மாள் குத்தகை எழுதிக்கொடுக்க உரிமையில்லை. ஆயுள் முழுவதும் அனுபவிக்க மட்டுமே உரிமையுள்ளது. குத்தகை பத்திரம் வாதியால் பணத்திற்காக மோசடியாக தயார் செய்யப்பட்டது . வாதியால் பொய் வழக்கு தாக்கல் செய்து இடைக்கால உறுத்துக்கட்டளை பெற்று தாவா சொத்தை பிரதிவாதியிடம் அபகரிப்பு செய்ய முயற்சி செய்கிறார் . எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்பபடவில்லை சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>5. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதம்</u>

தாவா அசல் வழக்கில் எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை கோரியுள்ளார் என்றும் , தாவா சொத்து ஒரு பொன்னம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும் , எதிர்மனுதாரர் பொன்னம்மாளின் மகள் என்றும், பொன்னம்மாள் கடந்த 01.02.2020 ம் தேதி மனுதாரர் / வாதிக்கு தாவா சொத்துக்களை போக்கிய உடன்படிக்கை ஏற்படுத்தி ரூ . 5,00,000/– பெற்றுக்கொண்டு 5 வருட காலதிற்கு குத்தகை இல்லாமல் சுவாதீனம் கொடுத்துவிட்டார் என்றும் , அதில் மனுதாரர் பூமியை சமன்செய்து பயிரிட விவசாய காரியங்களை செய்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரர் திருமணமாகி கணவருடன் வசித்து வருகிறார் என்றும் , தாவா சொத்துக்களில் அவர் சுவாதீனத்தில் இல்லை என்றும் , தாவா சொத்துக்கள் பொன்னம்மாளின் நேரடியான சுவாதீனத்தில் 37 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருகிறார் என்றும் , கடந்த 12.12.2020 ல் எதிர்மனுதாரர் தாவா சொத்துகளுக்குள் தனது அடியாட்களுடன் அத்துமீறி நுழைந்து மனுதாரரை வேலை செய்ய கூடாது என்றும், பூமியை விட்டு வெளியேற வேண்டும் என்றும் கூறி தகராறு செய்து வருகிறார் என்றும், மனுதாரரின் தாவா சொத்திற்கும், எதிர்மனுதாரர் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றும் , இரண்டும் வெவ்வேறானது என்றும் கடுமையாக ஆட்சேபணை செய்ததால் எதிர்மனுதாரர் திரும்பி சென்றார் என்றும் , அவரது மகன்கள் மற்றும்

எதிர்மனுதாரர் மீது அசல் வழக்கு எண். 118/2020 வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், எதிர்மனுதாரர் மனுதாரர் மீதும் , பொன்னம்மாள் மீதும் தாக்கல் செய்த அ.வா.எண். 169/2020 வழக்கும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும் , எதிர்மனுதாரர் தொடர்ந்த அ.வ.எண். 169/2020 வழக்கு சொத்திற்கும், இந்த தாவா சொத்துக்களும் வெவ்வேறானவை என்றும் , அசல் வழக்கு முடியும் வரை எதிர்மனுதாரரோ, அவரது ஆட்களோ மனுதாரரின் அனுபவத்தில் உள்ள தாவா சொத்தில் இடையூறு செய்ய கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரினார்.

**<u>6. எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதம்</u>**

எதிர்மனுதாரர் தரப்பில் , எதிர்மனுதாரர் பொன்னம்மாளின் மகள் என்பது உண்மை என்றும், தாவா சொத்தை பொன்னம்மாள் மனுதாரருக்கு போக்கியத்திற்கு கொடுக்கவில்லை என்றும், போக்கிய ஆவணம் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றும், மனுதாரர் தாவா சொத்தில் இல்லை என்றும் , இவ்வழக்கு நிலுவையில் உள்ளது மட்டும் உண்மை என்றம், அதனால் தாவா சொத்து அ.வ.எண். 169/2020 ல் உள்ள சொத்தும் வெவ்வேறானது என்பது உண்மையில்லை என்றும் , தாவா சொத்து 12.12.2020 ஆம் தேதியில் எதிர்மனுதாரர் இடையூறு செய்ய முயற்சிப்பதாக சொல்வது பொய் என்றும் , எதிர்மனுதாரர் தகப்பனார் கொங்கினியப்பன் என்பவருக்கு மடத்துக்குளம் தாலூக்கா, வேடப்பட்டி கிராமத்தில் பூர்வீகமாக விவசாய பூமிகள் உள்ளது என்றும், மேற்படி பூமிகளை 01.03.1980 ஆம் தேதியன்று பிரதிவாதியின் தகப்பனார் கொங்கினியப்பன் மற்றும் எதிர்மனுதாரரின் தாயார் , சகோதரி மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர்கள் பாக பிரிவினை செய்து கொண்டார்கள் என்றும், மேற்படி பாக பத்திரத்தில் ஏ செட்யூல் சொத்துக்கள் எதிர்மனுதாரருக்கும், அவரது சகோதரரான துரையரசன் பாகத்திற்கும் கூட்டாக ஒதுக்கப்பட்டது என்றும், அதன்படி வேடபட்டி கிராமம், க.ச. 145 நெ. காலையில் புஞ்சை ஏக்கர் 6.33 விஸ்தீரணம் உள்ள விவசாய பூமிகள் எதிர்மனுதாரருக்கும், அவரது சகோதரர் துரையரசன் பாகத்திற்கும் கூட்டாக ஒதுக்கப்பட்டது என்றும் , மேற்படி சொத்துக்களில் கொங்கியப்பன் மற்றும்

பொன்னம்மாள் ஆயுள் வரை அனுபவ பாத்தியம் கொடுத்து உரிமை வழங்கப்பட்டது என்றும், எதிர்மனுதாரரின் சகோதரர் துரையரசன் கடந்த 10.02.1995 ஆம் தேதியில் தன்னுடைய தயாரான பொன்னம்மாளுடன் சேர்ந்து அவருக்கு உரிய 3 ஏக்கர். 3.30 சென்ட் பூமியை விற்பனை செய்துவிட்டார் என்றும் , அந்த பத்திரத்தில் இந்த எதிர்மனுதாரர் கையெழுத்து செய்யவில்லை . துரையரசன் வற்புறுத்தியதால் கையெழுத்து செய்துள்ளார் என்றும் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட 3.30 ஏக்கர் உள்ள பூமியை எதிர்மனுதாரர் தனது சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரரின் தாயாரான பொன்னம்மாளுக்கு அன்றாட பராமரிப்பு செலவுகளுக்கு பணம் கேட்டதன் பேரில் எதிர்மனுதாரர் அதற்கு ஒப்புக்கொண்டு பணம் கொடுத்து வருகிறார் என்றும் , பு.ஏ. 3.03 விஸ்தீரணம் உள்ள பூமிகளில் ஏக்கர் 1.00 விஸ்தீரணம் உள்ள பூமியை பொன்னம்மாள் மற்றும் அவரது சகோதரரான துரையரசனுடன் சேர்ந்து எதிர்மனுதாரர் கடந்த 11.06.1991 ஆம் தேதியில் விற்பனை செய்து ரூ. 21,000/- பராமரிப்பு செலவிற்கு கொடுத்துவிட்டார் என்றும், மீதமுள்ள ஏக்கர் 2.03 விஸ்தீரணம் உள்ள பூமிகளை எதிர்மனுதாரர் தனது சுவாதீன அனுபவத்தில் வைத்துள்ளார் என்றும் , அதன் விஸ்தீரணத்தை அதிகப்படுத்தி தாவாவில் குறிப்பிட்டுள்ளார் என்றும், கடந்த 2019 ம் வருடம் வாதி , எதிர்மனுதாரரை அணுகி தாவா பூமியை குத்தகைக்கு விடுமாறு கேட்டுள்ளார் என்றும் , எதிர்மனுதாரர் குத்தகைக்கு விடாததால் வீண் விரோதம் கொண்டு தாவா சொத்தை அபகரிக்க வேண்டி கடந்த 22.04.2019 ஆம் தேதியில் பிரதிவாதியும், அவரது மகள் ஷர்மிளா, மகன் காசிம் ஆகியோர்கள் சேர்ந்து வாதிக்கு குத்தகைக்கு விட்டது போல மோசடியான ஆவணம் ஏற்படுத்தி தாவா சொத்தில் செங்கல் சூளை அமைக்க முற்பட்டார் என்றும் அதனால் வாதி , பிரதிவாதியின் தாயார் பொன்னம்மாள் மற்றும் சகோதரிகளை தூண்டிவிட்டு அ.வ.எண். 118/2020 தாக்கல் செய்துள்ளார் என்றும், கடந்த 01.11.2020 ஆம் தேதியில் தாவா சொத்தில் பிரதிவாதி விவசாய பணியுல் ஈடுபட்டு இருந்த போது வாதி விவசாயம் செய்ய கூடாது என்று மிரட்டினார் என்றும் , அதனால் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி பிரதிவாதி அ .வ.எண். 161/2020 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றும் , எதிர்மனுதாரரின் தாயார் பொன்னம்மாள் குத்தகை

எழுதிக்கொடுக்க உரிமையில்லை என்றும், ஆயுள் முழுவதும் அனுபவிக்க மட்டுமே உரிமையுள்ளது என்றும், குத்தகை பத்திரம் வாதியால் பணத்திற்காக மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றும் , வாதியால் பொய் வழக்கு தாக்கல் செய்து இடைக்கால உறுத்துக்கட்டளை பெற்று தாவா சொத்தை பிரதிவாதியிடம் அபகரிப்பு செய்ய முயற்சி செய்கிறார் என்றும், மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

7. <u>இம்மனுவில் கீழ்க்கண்ட பிரச்சனையை தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளது.</u>

மனுதாரர் தரப்பில், எதிர்மனுதாரரோ, அவரது உள்ளிட்ட ஆட்களோ, தாவா சொத்துகளுக்குள் அத்துமீறி நுழையவோ, மனுதாரரின் சுவாதீன அனுபவத்திற்கு எந்த வித இடையூறுகளும், கொடுக்கவோ கூடாது என தாவா முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

8. <u>தீர் வு :-</u>

இருதரப்பு வாதமும் கருத்தில் கொள்ளப்பட்டது . இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கவில்லை . ஆவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை . இந்த மனுவில் மனுதாரர்/வாதி தாவா சொத்தின் அனுபவத்திலும், உரிமையிலும் உள்ளாரா? என்பதை கருத்தில் கொள்ளும் போது , வாதி, தாவா சொத்தை பிரதிவாதியின் தாயாரான பொன்னம்மாளிடம் கடந்த 01.12.2020 ஆம் தேதியில் போக்கியத்திற்கு பெற்று சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருதாகவும் கட்சி செய்யப்பட்டுள்ளது . அசல் வழக்கில் போக்கிய உடன்படிக்கை ஆவணம் மற்றும் பிரதிவாதி தாக்கல் செய்த அசல் வழக்கு எண் . 169/2020 வழக்குரை ஆகியவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது . வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை . இந்த இடைநிலை மனுவில் எந்த ஆவணமும் இருதரப்பிலும் குறியீடு செய்யப்படவில்லை . தாவா சொத்தில் வாதி சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்பதற்கு சட்டப்படியான ஆவணங்களான சிட்டா அடங்கல் எதுவும் தாக்கல் செய்து குறியீடு செய்யப்படவில்லை. மேலும் பிரதிவாதி வாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண் . 169/2020 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது .

அதனால் தாவா சொத்தில் வாதி தனது சுவாதீன அனுபவத்தில் உள்ளார் என்று இடைக்கால மனுவில் தீர்மானிக்க முடியாது . அசல் வழக்கின் இறுதியில்தான் தீர்மானிக்க முடியும். தாவா சொத்தும் அசல் வழக்கு எண் . 169/2020 என்ற வழக்கில் உள்ள சொத்தும் வேறா அல்லது ஒன்றா என்பதை பொருத்து தரப்பினர்களின் சாட்சியம், ஆவணம் கொண்டுதான் தீர்மானிக்க முடியும். இந்த இடைநிலை மனுவில் செய்த வாய்மொழி வாதத்தை வைத்து மட்டும் தீர்மானிக்க முடியாது . இறந்து போன பொன்னம்மாளுக்கு குத்தகை பத்திரம் எழுதிக்கொடுக்க உரிமை உள்ளதா ? இல்லையா என்பதை பொறுத்து அசல் வழக்கின் இறுதியில் தான் தீர்மானிக்க வேண்டும். அதனால் இந்த வழக்கில் மனுதாரர் பக்கம் முதல் நிலை நோக்கும் , சமநிலை வாய்ப்பும் இல்லை என்றும் , இதனால் மனுதாரர்/வாதிக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. இம்மனுவில் செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு , அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு , என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு , இன்று 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் 07 ம் நாள் என்னால் , திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

**ஒப்பம்/– திரு.R. பாக்கியராஜ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல்**
**மற்றும் நீதித்துறை நடுவர்**
**மடத்துக்குளம்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்</u>**

இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்</u>**

<u>இல்லை.</u>

**ஒப்பம்/– திரு.R. பாக்கியராஜ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல்**
**மற்றும் நீதித்துறை நடுவர்**
**மடத்துக்குளம்.**

**இ.ம.எண். 300/2020**
**<u>அ.வ.எண். 185/2020</u>**
**நாள் – 07.12.2021**
**<u>உத்தரவு அவையறிய பகரப்பட்டது</u>.**

இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. இம்மனுவில் செலவுத் தொகை இல்லை.

**மாவட்ட உரிமையியல்**
**மற்றும் நீதித்துறை நடுவர்**
**மடத்துக்குளம்.**

IA.No.300/2020 OS.No.185/2020 07.12.2021